


உலக பாரா தடகள போட்டி – வாள் வீச்சுப் போட்டிகளில் பங்கேற்கவிருக்கும்

# 18 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.16.70 லட்சம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.9-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2025) புது தில்லியில் 8.3.2025 முதல் 11.3.2025 வரை நடைபெறவிருக்கும் உலக பாரா தடகள கிராண்ட் ப்ரீ (World Para Athletic Grand Prix) 2025 போட்டியில் பங்கேற்கவிருக்கும் தமிழ்நாட்டைச்சேர்ந்த 16 வீரர்- வீராங்கனைகளுக்கு செலவீன தொகையாக தலா 65 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 10.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

தொடர்ந்து, கஜகஸ்தான் நாட்டில் 14.2.2025 முதல் 16.2.2025 வரை உலக வாள்வீச்சு கூட்டமைப்பு (FIE) நடத்தும் ஜூனியர் உலக கோப்பை வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ள தமிழ்நாடு வீராங்கனை செல்வி. பிளெஸ்ஸிலா சங்மா, வீரர் திரு. ப. அரவிந்தன் ஆகியோருக்கு செலவீன தொகையாக தலா ரூ. 3.15 லட்சம் வீதம் ரூ.6.30 லட்சத்திற்கான காசோலைகளையும் சேர்த்து கூடுதல் மொத்தமாக 18 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ. 16.70 லட்சத்திற்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

மேலும் லடாக் யூனியன் பிரதேசம், லே நகரத்தில் 24.1.2025 முதல் 27.1.2025 வரை நடைபெற்ற கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 வீரர்-வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து பாராட்டும், வாழ்த்தும் பெற்றனர். இப்போட்டியில் பங்கேற்க 11 தமிழ்நாடு வீரர்- வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் செலவீன தொகையாக ரூ. 7.05 லட்சம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

திருநாவலூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கவுன்சிலர்

# ஜி.ஆர்.வசந்தவேல் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நாளை நடைபெறுகிறது!

உளுந்தூர்பேட்டை, , பிப். 9-

தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், எலவத்தடி, கௌசலை அம்மாள் இல்லம், தமிழ் ஆசிரியர், புலவர் கோ.இராசவேலு படையாட்சி இரா. கௌசலை அம்மாள் இவர்களின் மகன்வழிப் பேரனும், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலவன்குப்பம், கே. இராசாங்கம் படையாட்சி - இரா. சின்னம்மாள் இவர்களின் மகள்வழிப் பேரனும் ஜி. ஆர்.வசந்தவேல்ஒசுந்தரிகியோரின்கனுமான மருத்துவர் வ.சந்தரபோஸ் என்கிற வரனுக்கும்,கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், ஆயிபுரம் மதுரா, மணல்மேடு உடற்கல்வி ஆசிரியர் அ.கோவிந்தசாமி படையாட்சி - கோ.சாவித்திரி இவர்களின் மகன்வழிப் பேத்தியும், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கடக்கம், இரா. இராஜகோபால் கண்டியர் - இரா.சேதுஆயாள் இவர்களின் மகள்வழிப் பேத்தியும் கோ.உதயகுமார் திருமதி உ.சுதா ஆகியோரின் புதல்வியுமான மருத்துவர் உ.சுவேதா என்கிற கன்னிகைக்கும் நாளை (பிப்ரவரி 10 - திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் 10:30 மணி வரை கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அடுத்த பதூர் வேதாந்தா பொறியியல் கல்லூரி வளாகத்தில் திருமணம் மிக சிறப்பான முறையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு வருபவர்களை கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்கின்றனர்.

பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும் விழாவில் வேளாண்மை- உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி கழகத் துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்பி, கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்,

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.எம்.செல்வகணபதி எம்.பி., துரை.ரவிக்குமார் எம்.பி, மாநில மருத்துவர் அணி துணை செய லாளர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், மாவட்ட செயலாளர்கள், அனைத்து கட்சி முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், குடும்பத்தினர், உறவினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காளி வி.எஸ்.வாசன்

**பிப்ரவரி 9 (2007)**



**மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.**

**முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. - நாகை நாகராசன் - நாக தியாகராஜன் பங்கேற்பு!

# காரைக்காலில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## பேரா.சுப.வீரபாண்டியன் - கோவி லெனின் - ஆலங்குடி செல்வராஜ் சிறப்புரை!

காரைக்கால், பிப். 9-

காரைக்கால் மாநில தி.மு. கழகம் சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் 06.02.2025 அன்று மாலை 6. மணி அளவில் திருநள்ளார் ரோடு கப்பாப்பா காலனி அருகே நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் சுமோ கார்த்திகேயன் தலைமை தாங்கிட தெற்கு தொகுதி செயலாளர் தமிமுன் அன்சாரி வரவேற்புரையாற்றிட துரைக்கண்ணபிரான், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வெற்றிச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் சேகர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் பிரபு என்கிற பிரித்திவிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்க தமிழ் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் தலைமைக்காக பேச்சாளர் ஆலங்குடி செல்வராஜ், தலைமை கழக சொற்பொழிவாளர் நாகை நாகராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் மாநில கழக அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் நிரவி திரு பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில செயற்குழு உறுப்பினருமான நாக தியாகராஜன் இலக்கிய அணி அமைப்பாளர் அமுதா ஆறுமுகம் அதன் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செல்வராஜ் மாநில அயலக அணி அமைப்பாளர் வசந்தன் மீனவர் அணி அமைப்பாளர் பொதுக்குழு உறுப்பினர் ராஜ்மோகன் வீரதாசன் இளைஞரணி அமைப்பாளர் முகமது ரிபாஸ் மாநில சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் முகமது ஜாகிர் உசேன் மாநில வர்த்தக அணி அமைப்பாளர் கந்தாஸ் சிவலிங்க ராஜா தொகுதி செயலாளர்கள் அம்பை சரவணன் உதயகுமார் வெற்றி மற்றும் அனைத்து அணி நிர்வாகிகளும் அதன் அமைப்பாளர்களும்துணை அமைப்பாளர்களும் பங்கேற்றனர்.

முடிவில் இந்த மாபெரும் பொதுக்கூட்டத்துக்கு வருகை புரிந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மாநில கழக நிர்வாகிகளுக்கும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கும் கழகத் தோழர்களுக்கும் மாணவரணி அமைப்பாளர் பெரியார் ஜவகர் நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை காரைக்கால் மாநில திமு கழகம் சார்பில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் விவரம் மற்றும் நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரம், **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் கொண்டதாக அமையும்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்:** 1.பாரதியார் நகர், 2.திருவள்ளுவர் நகர், 3. தேவசமுத்திரம், 4.நாராயணன் கொட்டாய், 5.பூசாரி கொட்டாய், 6.மாரப்பன் கொட்டாய், 7.அய்யர் கொட்டாய், 8.பொன்மலைகுட்டை, 9.ஜெ.ஜெ.நகர், 10. பெரியார் நகர், 11.ஜக்கப்பன் கொட்டாய், 12.காந்தி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 17வது வார்டு முதல் 33வது வார்டு வரையிலான 17 வார்டுகள்.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்:** 1.கட்டிக்கானப்பள்ளி, 2.மேல்புதூர், 3.கீழ்புதூர், 4.செல்லாண்டி நகர், 5.புதிய வீட்டு வசதி வாரியம்2, 6.புதிய வீட்டு வசதி வாரியம்1, 7.வினாயகர் கோவில் நகர், 8.சத்யசாய் நகர், 9.வஹாப் நகர், 10.வஹாப்நகர் கிழக்கு, 11.பெருமாள் நகர், 12.ராஜாஜி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 1வது வார்டு முதல் 16வது வார்டு வரையிலான 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : எம். வேலுமணி,
43பி, சீனிவாச காலனி,
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : என். அஸ்லாம் ரகுமான் ஷரிப்,
15/5, விநாயகர் தெரு, ராசு வீதி,
கிருஷ்ணகிரி 635 001.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

**பிப்ரவரி 9 (1985)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 08.02.2025. தி.மு.க.